ARTICLE 44 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00074
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 108–112
Received: 2 October 2026 • Accepted: 3 October 2026

பூமணியின் வெக்கை: ஓர் சமூகவியல் ஆய்வு

முனைவர் .பால்பாண்டி பெ[1,*]
[1]கௌரவ விரிவுரையாளர், சமூகவியல் துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில், India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர் .பால்பாண்டி பெ — tamilseminar12@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கியத்தில் சமூக வாழ்வையும் சமூக முரண்பாட்டைமயும் பதிவு செய்யும் படைப்புகளுள் பூமணியின் வெக்கை நாவல் குறிப்பிடத்தக்கது. கரிசல் நில மக்களின் வாழ்வியல், நிலவுடைமைச் சமூக அமைப்பு, சாதிய முரண்பாடு, வன்முறையின் தோற்றுவாய், அரசு நிறுவனங்களின் செயல்பாடு, குடும்ப அமைப்பு, பாச உணர்வு, பெண்களின் பாத்திரம் போன்ற பல்வேறு அரசியல் சமூகக்கூறுகளை இந்நாவல் வெளிப்படுத்துகிறது. தனிமனிதச் செயலுக்கும் சமூகச் சூழலுக்கும் இடையிலான உறவை ஆய்வு பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பூமணியின் கருத்தியல் நிலைப்பாடு நிலவுடைமை சாதிய சமூகத்தை காப்பதாக இருக்கிறது. இக்கட்டுரை மார்க்சிய சமூகவியல் அணுகுமுறையின் அடிப்படையில் ஆராய்கிறது.

Keywords / திறவுச் சொற்கள்: வெக்கை – பூமணி – இலக்கிய சமூகவியல் – மார்க்சியம் – நிலவுடைமை – சாதிய முரண்பாடு – கூட்டுமனம் – அரசு நிறுவனங்கள் –அரசு இயந்திரம் - கரிசல் வாழ்வியல்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பெ, மு. . (2026). பூமணியின் வெக்கை: ஓர் சமூகவியல் ஆய்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

முன்னுரை

சமூகத்தை தனது படைப்புக்கான ஆதாரமாகக் கொண்டிருக்கும் இலக்கியத்திற்கும் அச்சமூகத்தையே முதன்மையாக எடுத்துக்கொண்டு ஆராயும் சமூகவியலுக்கும் நெருக்கமான உறவு உண்டு. அதனால் தான் இலக்கிய சமூகவியல் என்ற கிளை பிற்பாடு உருவானது. இதில் முதன்மையானவராக கருதப்படுபவர் கைலாசபதி, கார்த்திகேசு சிவதம்பி நா.வானமாமலை ஆகியோரும் அடங்குவர். பூமணியின் வெக்கை நாவல் எந்த சமூக உற்பத்திமுறையின் கருத்தியலை (Ideology) பிரதிபலிக்கிறது. படைப்பாளனின் உணர்வு நிலையும் கருத்துநிலையும் பற்றி மார்க்சிய சமூகவியல் அடிப்படையில் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

நாவலின் மையம்

அண்ணன் கொலையுண்டதற்கு எதிர்வினையாக பதினைந்தே வயதுடைய சிறுவன் சட்ட மொழியில் கூறுவோமானால் குழந்தை சிதம்பரம் வடக்கூரான் என்னும் எதிரியை கையை வெட்ட நினைத்து குறி தவறி மார்பில் வெட்டுப்பட்டு இறந்து போகிறான். அதனைத் தொடர்ந்து ஒரு வார காலமாக தன் தந்தையுடன் காட்டிலும் மேட்டிலும் தலைமறைவாக இருந்து, பின்பு நீதிமன்றத்தில் சரணடைவது தான் கதையின் சாரமாக இருக்கிறது. கையில்லாமல் வாழ்நாள் வேதனையை கொடுக்க எண்ணி கையை மட்டும் வெட்ட நினைக்கிறான், அப்படி வெட்டயிலிருந்தால் அவனுக்கான

தண்டனையாக இருந்திருக்கும். அது ஒருவனுக்கு கொடுக்கக்கூடிய உச்சபட்ச தண்டனையும் கூட, மாறாக அவன் இறக்க நேரிட்டதால் மற்றவருக்கு எச்சரிக்கையாக மாறிவிட்டது என்பது தண்டனையின் தன்மையாகும். கதை எளிமை இருந்தாலும் அதன் விவரிப்புகள் அபாரமானவை, அப்படிப்பட்ட எழுத்துக்கு சொந்தக்காராக இருக்கிறார் பூமணி.

கரிசல் நிலக்காட்சி

சிறுவன் சிதம்பரத்தின் பார்வையிலும் நினைவுகளிலும் முழுக்கதையும் செல்கிறது. கரிசல் நிலத்தின் விவசாய முறை, கிணறு, கண்மாய், கமலைநீர்ப்பானம், பறந்தோடும் விதவிதமான குருவிகள், மலைச்சுனை, மலைகளில் சவாலாக உணவு சமைத்தல், உணவு சேகரித்தலில் பல்வேறு காட்டுப் பழங்கள், பனைமரம், நாணல் புதர், மாடசாமிக்கு பன்றிகுத்தல் சடங்கு, கிடா வெட்டுதல், பல்வகைத் தின்பண்டங்கள், வரப்பு வாய்க்கால்கள் ஆகியவற்றை மகனும் அப்பாவும் மிக நெருக்கமாக அந்த காட்டிற்கு நம்மளையும் கூட்டிச் செல்கிறார்கள். அந்த நிலம் பற்றியான தொன்மையான அறிவு நாவல் முழுவதிலும் கொட்டி குவித்துவிட்டு செல்கிறார் ஆசிரியர்.

கூட்டுமனமும் கொலையும்

15 வயதுடைய சிதம்பரம் கொலை செய்யும் அளவுக்கு எது தூண்டுதலாக இருந்துருக்கும், தன் அண்ணன் வடக்கூரனால் கொலை செய்யப்பட்டது உறுதியானதால் தன் குடும்பத்தினரான அப்பா, அம்மா, மாமா, அத்தை, சின்னையா, சின்னம்மா அனைவரும் கொலைப்பலி கொடுக்க காத்துக் கொண்டிருந்தனர், சொல்லப்போனால் அந்த பகுதி மக்களின் எண்ணமும் அதுவாகவே இருந்திருக்கிறது. இதுபோல ஒரே மாதிரியான எண்ணமே கூட்டுமனம் (collective consciousness) என்கிறார் சமூகவியல் அறிஞர் எமில் டர்க்ஹைம். இந்த கூட்டுமனம் சமூக விழுமியங்களால் கட்டமைக்கப்படுகிறது. கூட்டுமனம் வலுவாக உள்ள உயிரினங்களின் முதன்மையானவை தேனீக்கள் ஆகும், அவை எதிரிகளிடமிருந்து தன் கூட்டைக் காக்க தன் உயிரை கொடுத்து போராடுவது கூட்டுமனச் செயல்பாடே, இது தேனீக்களுக்கு இயல்பூக்கமாக இருக்கிறது. அதேபோல் பழங்குடினரும் தன் இனத்தைக் காக்க உயிரை கொடுக்கக்கூட தயங்கமாட்டார்கள் என்பது அச்சமூகத்தின் சமூகவயப்பட்ட கூட்டுமனம் ஆகும். பொதுவாக கூட்டுமனம் என்பது சமூகவயப்பட்டதாகவே இருக்கும், இந்த கூட்டுமனம் தான் சிதம்பரத்தை கொலை செய்யவும் தூண்டியிருக்கிறது. இந்த கொலை கூட்டுமனச் செயல்பாடு என்பதால்தான் இழிவைத் தராமல் புகழைத் தந்திருக்கிறது.

பழிக்குப்பழி – எதிர்வினை

இந்நாவல் பழிக்குபழி அடிப்படையாகக் கொண்டது என்ற வாதம் உண்டு, பழிக்குபழி என்ற சொல் வன்மமும் காட்டுமிராண்டித்தனமும் நிறைந்த சொல் போல தோற்றத்தை அளிக்கிறது. இந்த கொலை பழிக்குப்பழி அல்ல ஒரு கொலைக்கான எதிர்வினை. எதிர்வினை எனபது இயற்கையானது, அறிவியல் பூர்வமானது, அது தவிர்க்கவியலாது. ஆக எதிரி வடக்கூரானின் கொலை சிதம்பரம் குடும்பத்தின் எதிர்வினையாகவும், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான

எதிர்வினையாகவும் இருக்கிறது. நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை எதிரியே தீர்மானிக்கிறான் எனபது தொல் மார்க்ஸிய சொல்லிற்கிணங்க சிதம்பரம் கொலை செய்தது தவிர்க்க முடியாதாயிற்று.

நிலவுடைமையும் சாதியும்

நிலவுடைமை உற்பத்தி முறை கொண்ட சமூக அமைப்பில் உள்ள முரண்கள் வர்க்க அடிப்படையிலானவையா (நிலவுடமையாளரும் விவசாயிகளும்) அல்லது சாதிய படிநிலை (ஆதிக்க சாதிகளும் ஒடுக்கப்பட்ட சாதிகளும்) அமைப்பு கொண்ட சமூகமா என்ற கேள்விகளுக்கான பதிலை எங்கும் நேரடியாக கூறவே இல்லை. இது சாதிய மோதலா அல்லது வர்க்க மோதலா எங்கும் தெளிவு காண முடியாத அளவிற்கு பந்த பாசத்தால் பிணைத்து இருப்பார் ஆசிரியர். ஆனாலும் நாம் யூகிக்க இடமுண்டு, நிலவுடைமைச் சமூகத்தை பொறுத்தவரை முக்கிய முரண்குழுக்கள் நிலவுடமையாளரும் விவசாயிகளும் அல்லது கூலிகளும் ஆகும். இந்தியாவைப் பொறுத்தவரை நிலவுடைமையாளர்கள் ஆதிக்க சாதியாகவும் விவசாயிகள், கூலிகள் ஒடுக்கப்பட்ட சாதிகளாகவும் இருக்கின்றனர் என்பது ஏதார்த்தமானவை. எனவே இக்கதையில் முக்கிய முரணாக இருப்பது சாதிய முரண்பாடகளே. நிலப்பிரச்சனையாக இருந்தாலும் அது சாதியை அடிப்படையாக கொண்டே இருக்கிறது. சிதம்பரத்தின் குடியிருப்பு பகுதி வடக்கூரான் கொலையுண்ட பிறகு ஊரே ஆயுதங்களுடன் விழிப்புடன் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் ஒற்றுமை ஒடுக்கப்பட்டோரின் சாதிய ஒற்றுமையாகவே இருக்கிறது. ஆகையால் இக்கதைக்களம் சாதிய பிரச்சினையினை அடிப்படையாக கொண்டதாகத் தான் எடுத்துக்கொள்ள முடியும். ஆக இந்தியாவை பொறுத்தவரை நிலவுடைமை சமூகம் என்பது சாதிய படிநிலை கொண்ட சமூக அமைப்பாகும்.

ஒடுக்கும் அரசு இயந்திரம்

அரசு நிறுவனங்களான நீதித்துறை, காவல் நிலையம், சிறைச்சாலை ஆகியவை சாமானியர்களுக்கு எதிராகவும் நில உடமையாளருக்கு ஆதரவாக இருக்கிறது என்ற பார்வையை சிதம்பரத்தின் ஐயாவின் புலம்பல் வாயிலாக வெளிப்படுத்துகிறார். அரசு என்பது ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கும் இயந்திரம் என்கிறார் பிரெஞ்சு மார்க்சிய சிந்தனையாளர் அல்தூசர். அரசு இரண்டு வழிகளில் ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவாக செயல்படும் 1. ஒடுக்குமுறை அரசு இயந்திரம் (Repressive State apparatus). நீதித்துறை, காவல்துறை, ராணுவம், சிறைச்சாலை ஆகியவற்றை கொண்டு நேரடியாக தாக்கம் செலுத்தும். 2. கருத்தியல் அரசு இயந்திரம் (ideological state Apparatus) கல்வி, மத நிறுவனங்கள் குடும்பம், ஊடகம், கதை, நாவல் ஆகியவற்றைக் கொண்டு கருத்தியல் ரீதியாக தாக்கம் செலுத்தும். இந்நாவல் அரசு நிறுவனங்கள் ஆளும் வர்க்கமான நிலவுடமையாளர், சாதிய நலன்களையே முதன்மையானதாகவே பாதுகாக்கிறது என்பதை அப்பா கதாபாத்திரத்தின் வழியே உணர்த்துகிறார் ஆசிரியர். கதைக்களம் புரட்சிகரமான சூழலை வாய்ப்பாக வழங்கினாலும் அரசை விமர்சனத்தோடு அணுகினாலும் கடைசியில் ஆசிரியர் பாசநயங்களின் கைதியாகிறார்.

பெண்களின் இருப்பு

பெண்களைப் பற்றி மிக சொற்ப இடங்களே கொடுத்து உள்ளார். சிதம்பரத்தின் அம்மா அத்தை தங்கை சின்னம்மா ஆகியோர் மட்டும் வருகிறார்கள், அவர்களும் அன்பை வாரிப் பொழிபவர்களாகவும், தேவையான நேரத்திற்கு உணவை கொடுக்கக் கூடியவர்களாகவும் காட்டப்பட்டுள்ளனர். ஆண்கள் சாதியை காப்பவராகவும், மத சடங்குகளை நடத்துபவராகவும், கிடாய் வெட்டுதல், சாமியாடுபவர், சாராயம், பீடிகுடித்தல் என அனைத்தும் ஆண்களாகவே இருக்கிறார்கள். பெண்களுக்கான இடம் சமூகத்திலும் நாவலிலும் எங்கும் காணக் கிடைக்கவில்லை. 'பதினஞ்சு வயசாகல நீ எங்களப் பொட்டப் பெயலாக்கீட்ட. மூஞ்சியிலகூட முழிக்காம தலைய ஒட்டீட்டுப் போறாரு ஒங்கய்யா'(ப.20), சிதம்பரம் கொலை செய்ததால் அது அவங்க அப்பாவையும் மாமாவையும் அவமானம் அடைந்ததாக அடிக்கடி புலம்பிக் கொள்கிறார்கள்.. கொலை செய்வது கூட வயது வந்து ஆணுக்கு உரியதாக இருக்கிறது. ஒருவேளை பெண்கள் யாரவது வடக்கூரானை கொலை செய்திருந்தால் இந்த ஆம்பளையெல்லாம் தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள்போல. ஆசிரியர் ஆண்கள் நலனிற்காக ஆண்களே மோதிக்கொள்ளும் ஆணாதிக்க சமூகமாகக் கட்டமைத்துள்ளார்.

பூமணியின் கருத்தியல்

பூமணி என்ன மாதிரியான கருத்துநிலை உடையவர் என்பதை இந்நாவலின் உதவி கொண்டு முயற்சிப்போம். நிலவுடைமை சமூகத்தில் சிறிய நிலத்துண்டு இருந்தாலும் அதை நிலவுடமையாளன் கைப்பற்றத்தான் நினைப்பான். அவன் அதற்காக கொலை செய்யும் அளவுக்கு சென்று சிதம்பரத்தின் அண்ணணையை கொலை செய்யவும் செய்கிறான். பிற்பாடு பழிக்குப்பழி வாங்கிய பின்பு அரசு நிறுவனமான காவல் நிலையம், நீதிமன்றம், சிறை ஆகியவை ஆளும் வர்க்கமான நிலவுடைமையாருக்கு சாதகமாகத்தான் செயல்படும் என்பதை பாதிப்படுவோரின் பக்கம் நின்று பேசுகிறார்.. அழித்தொழிப்பு என்பது இடதுசாரி சிந்தனையின் ஒரு பகுதி, இந்தியாவில் தமிழ்நாடு உட்பட நிலவுடமையாருக்கு எதிராக பல இடங்களில் சாதிய ஒடுக்குமுறைகள், தொழிலாளர் சுரண்டலுக்கு எதிராகவும் அழித்தொழிப்பு நடைபெற்று இருக்கிறது. அதை இக்கதையில் மையமாக வைத்துள்ளார். இந்நாவலின் உழைக்கும் வர்க்கத்திற்கு இழைத்த அநீதி கொலை அதற்கு பதிலாக உழைக்கும் வர்க்கம் எதிரியை அழித்தொழிப்பு, சமத்துவ வாழ்வு என்ற வகையில் இல்லாமல் முழுக்க பாசத்தில் கிடைத்துவிடுகிறார். நாவலின் இறுதி பகுதியில் இந்த சமூகத்தையும் அரசு நிறுவனங்களையும் விமர்சித்து விட்டு தன் ஆடுகள் அனைத்தும் வித்துவிட்டு அந்த பணத்தை கொண்டு அந்த அரசு நிறுவனத்திடமே சரணடைய செய்கிறார். சமூக மாற்றம், ,விடுதலை, சாதி ஒழிப்பு குறித்தெல்லாம் பேசாமல் கொலைக்கு பின்பாக அவர்கள் படும் இன்னல்களை கதைக் களமாகக் காட்டிள்ளார் என்பதில் இருந்து ஆசிரியரின் கருத்தியல் சார்புநிலை நிலவுடைமை பாதுகாப்பதில் நிலைத்துவிடுகிறது.

உழைக்கும் வர்க்கம் அல்லது ஒடுக்கப்பட்ட சாதிகள் எதிர்வினையாக கொலை செய்தால் காட்டிலும் மேட்டிலும் திரிய வேண்டியிருக்கும். நீங்கள் வாழ்நாள் முழுவதும் சம்பாதித்த சொத்தை இழக்க நேரிடும் என்று

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

எச்சரிக்கிறார். இக்கொலை இச்சமூகத்தில் என்ன மாதிரி அதிர்வை உண்டாக்கிருக்கும் என்பதை மறைத்து சதாகாலமும் ஆதிக்க சாதினர் அச்சுறுத்தலுக்கும், அழிப்புக்கும் உள்ளாகிக்கொண்டே சாதாரணமாக நடைபெறும் குடும்பம், பாசத்தை பிரதானப் படுத்துகிறார்.

முடிவுரை

இறுதியாக, திரும்பவும் அல்தூசரிடமே வருவோம், ஆளும் சாதிகளின் நலனை பாதுகாக்க அரசு இயந்திரம் இரண்டு வழிகளில் செயல்படும் என்பதை பார்த்தோம். கருத்தியல் தளத்தில் ஆதிக்க கருத்தியலை நிலைநிறுத்த முக்கிய கருவியாக இலக்கியம் செயல்படுகிறது. வெக்கை எனும் நாவல் நிலவுடைமை சமூக அமைப்பை அதாவது சாதிய அமைப்பை பாதுகாக்கவே செய்கிறது.

துணைநூற் பட்டியல் (References)

1. பூமணி , வெக்கை, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில், 2019.
2. ராஜ்கொதமன், எண்பதுகளில் தமிழ் கலாச்சாரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018
3. கார்த்திகேசு சிவத்தம்பி, இலக்கியமும் கருத்துநிலையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2011.
4. கைலாசபதி.க , சமூகவியலும் இலக்கியமும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 2002.
5. தனஞ்செயன். ஆ, இலக்கியச் சமூகவியல் கைலாசபதியின் அறிமுகமும் விமர்சனமும், உங்கள் நூலகம், செப்டம்பர் 2026, மலர்19 இதழ் 6.
6. Doshi S.L, Modernity, Post Modernity and Neo sociological theories, Rawat publication, New Delhi, 2006

© 2026 முனைவர் .பால்பாண்டி பெ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..